**தலைப்பு 108 – தபால் சேவைகள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் 4 ஆம் பந்தி வரை ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1. தபால் சேவைகள் அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| **தலைப்பு** | **திணைக்களத்தின் பெயர்** |
|---|---|
| 308 | தபால் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தபால் சேவைகள் அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களம் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
| --- | --- | --- |
| 108 | தபால் சேவைகள் அமைச்சு | 2015.09.02 |
| 308 | தபால் திணைக்களம் | 2015.09.02 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 10,086 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 9,993 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 51 மில்லியன் மற்றும் ரூபா 42 மில்லியன் தொகை அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் முறையே 14 சதவீதம் மற்றும் 0.4 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 108 | 359 | 308 | 51 | 14.2 |
| 308 | 9,727 | 9,685 | 42 | 0.4 |
| மொத்தம் | **10,086** | **9,993** | **93** | **0.9** |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டிற்காக 20.01.02.00 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்காக ரூபா 6,200 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 6,557 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் ரூபா 357 மில்லியன் அல்லது 6 சதவீதத்தினால் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

#### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 10801 | 4.0 | 3.0 | 1.9 | 2.8 | 30.0 | 10.2 |
| 30801 | 650.0 | 557.7 | 520.0 | 563.9 | 2,200.0 | 1,757.8 |

## 2.4 கட்டுநிதி கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 732.17 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு / திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கின் இலக்கம் | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| தபால் சேவைகள் அமைச்சு | 7002/0000/00/0349/0014/000 | 0.63 |
| தபால் திணைக்களம் | 7002/0000/00/0098/0014/000 | 731.54 |
| மொத்தம் | | **732.17** |

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 50.39 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கின் இலக்கம் | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| தபால் சேவைகள் அமைச்சு | 6000/0000/00/0015/0022/000 | 5.87 |
| தபால் திணைக்களம் | 6000/0000/00/0015/0162/000 | 44.52 |
| மொத்தம் | | 50.39 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தபால் சேவைகள் அமைச்சினதும் அதன் கீழான திணைக்களத்தினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. அம்முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து 4 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 108 – தபால் சேவைகள் அமைச்சு

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 300,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 17 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 12 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையான அளவைக் கொண்டிருந்தது.

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

10801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான முற்பணக் கணக்கின் தனிப்பட்ட வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 11,125,572 ஆக இருந்த போதும், கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் அது ரூபா 10,231,005 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 894,567 ஆன வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 206,391 ஆக இருந்தது. அந்த நிலுவையாக இருந்த மீதிகள் 04 வருடங்கள் முதல் 06 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்ட போதிலும், அந் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பான பின் தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டன.

### 3.3 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத ஓராண்டிற்கு குறைந்த காலமாக இருந்து வரும் ரூபா 41,694,964 ஆக இருந்ததுடன், அப்பொறுப்புக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தபால் அலுவலகங்களை வலைப்பின்னல்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் கணனி மற்றும் கணனி உபபாகங்களை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 36,526,500 ஆன பட்டியல் 2014 திசெம்பர் மாத இறுதியில் கிடைக்கப்பெற்றிருந்தது. அப்பொறுப்புக்களில் ரூபா 12,636,000 தொகை 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 94(i) இற்கு இணங்காமல் 12 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்களை விஞ்சி ரூபா 2,102,559 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(இ) 2015 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 434,103 தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கின் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

தபால் அலுவலகங்களை வலைப்பின்னல்படுத்தும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2007 ஒக்தோபர் 31 ஆந் திகதிய 12/2007 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

(அ) எதிர்பார்த்த வருமானங்களை சேகரிப்பதற்கு முறையான திட்டமொன்றை ஸ்தாபித்தல்

(ஆ) புதிய வியாபார முயற்சிகளிலிருந்து வருமானம் உழைக்கும் உபாயமொன்றை ஸ்தாபித்தல்

(இ) தபால் திணைக்களம் தொடர்ச்சியாக நட்டம் அடைவதைத் தவிர்த்து வருமானத்தையும் செலவினத்தையும் சமநிலையில் பேணுதல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தபால் அலுவலகங்களை வலைப்பின்னல்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 300 மில்லியன் செலவின மதிப்பீட்டு ஒன்றுடன் 2008 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் குறித்த நடவடிக்கைகள் 02 வருடங்கள் தாமதத்துடன் 2014 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

(ii) ஆரம்ப கிரய மதிப்பீடு ரூபா 648.8 மில்லியன் வரை அதாவது 116 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 514.27 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக இச்செயற்திட்டத்தின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 174.52 மில்லியனாக இருந்த போதிலும், அதற்காக ரூபா 135.93 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட செலவினத்தின் 78 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

(iii) செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் வேலை நிறைவு அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) செயற்திட்டத்தின் மூலம் அடைவதற்கு எதிர்பாரத்த ஒரு நோக்கமான தபால் திணைக்களம் தொடர்ச்சியாக நட்டம் அடைவதைத் தவிர்த்து வருமானத்தையும் செலவினத்தையும் சமநிலையில் பேணிச் செல்வதாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 2,984 மில்லியன் நட்டத்தை அடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அந்நட்டம் ரூபா 125 மில்லியனால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் நோக்கம் மீளாய்வாண்டின் போதும் அடையப் பெற்றிருக்கவில்லை.

(v) செயற்திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த MORS மற்றும் E-pay மென்பொருட்களில் நலிவுகள் காணப்பட்டமையால் காசுக் கட்டளை கணக்கை தயாரிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் இடம்பெற்றிருந்தன.

- 2013 ஆம் ஆண்டில் காசுக் கட்டளைகளை வழங்குதல் மற்றும் கொடுப்பனவு அனைத்தும் கணனி முறைமைக்கு உட்படுத்தப்படாமையால் காசுக் கட்டளைகளை சரியாக வழங்குதல்,

கொடுப்பனவு மற்றும் தரகு வருமானம் என்பவற்றை கணக்கிட முடியாதிருந்தமை.

- கணனி முறைமையினூடாக தனியான மீதிகள் பட்டோலையொன்று பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை.

- 2013 ஆம் ஆண்டில் தீர்வுசெய்யப்படாத காசுக் கட்டளை மீதியை கணனி முறைமையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியாமையால் அரசின் வருமானத்திற்குச் செலவு வைக்க வேண்டிய மீதி மற்றும் முன்கொண்டு வரப்பட வேண்டிய மீதிகளை இனங்காண முடியாமல் இருந்தமை.

- காசுக் கட்டளை வழங்கல், காசுக்கட்டளை கொடுப்பனவு மற்றும் காசுக்கட்டளை தரகு வருமானம் தொடர்பாக திணைக்களத்தின் கணனி மென்பொருள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மீதிகள் மற்றும் காசுக் கட்டளை கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் மீதிகளுக்கிடையே முறையே ரூபா 4,957 மில்லியன், ரூபா 3,589 மில்லியன் மற்றும் ரூபா 20 மில்லியன் ஆன வேறுபாடுகள் காணப்பட்டன.

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------

**அரச கொள்வனவு வழிகாட்டி கோவை செயற்பாட்டிலிருந்து விலகுதல்**

-----------------------------------------------------------------

கீழே காட்டப்பட்டுள்ள கொள்வனவு தொடர்பாக அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) **கணனிகள், கணனி அச்சுப் பதிவு இயந்திரங்கள், தொடர்ச்சியான மின்சாரம் வழங்கல் அலகு மற்றும் 500 வைரஸ் மேவுகை கொள்வனவு**

-----------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது தபால் அலுவலகங்களை வலைப்பின்னல்படுத்தும் செயற்திட்டத்திற்காக கணனிகள், கணனி அச்சுப் பதிவு இயந்திரங்கள், தொடர்ச்சியான மின்சாரம் வழங்கல் அலகு மற்றும் 500 வைரஸ் மேவுகை என்பன ரூபா 72,387,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்குறித்த கொள்வனவிற்காக தேசிய கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.2.1 வழிகாட்டலின் பிரகாரம் தேசிய ரீதியான போட்டி கேள்வி கோரப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 நவம்பர் 07 ஆந் திகதி நடைபெற்ற கொள்வனவுக் குழுக் கூட்டத்தின் போது தகைமையுடைய வழங்குனரை தெரிவுசெய்வதற்கு முடியாமல் இருந்தது. கேள்வி சமர்ப்பித்த 05 நிறுவனங்களிலிருந்து பெறுமதி சேர் வரி (VAT) தவிர ரூபா 69,350,000 ஆக குறைந்த கேள்வி கீழே காட்டப்பட்ட காரணங்கள் குறிப்பிடப்பட்டு நிராகரிக்கப்பட்டிருந்தது.

- குறைந்தது ரூபா 25 மில்லியன் தேறிய திரவச் சொத்துக்கள் கேள்விதாரருக்கு இருக்க வேண்டிய போதிலும், அவரிடம் ரூபா 6.15 மில்லியன் திரவச் சொத்துக்கள் காணப்பட்டமை மற்றும்
- கேள்விதாரர் அல்லாத வேறு களஞ்சியமொன்றிலிருந்து / நிறுவனமொன்றிடமிருந்து பராமரிப்பு மற்றும் தொழில்நுட்ப சேவைகள் கேள்விதாரர் எதிர்பார்த்தால் அதற்குரிய உடன்படிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த உடன்படிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கொள்வனவின் போது கேள்விதாரரின் தகைமையைப் பரீட்சிப்பதற்காக 03 வருடங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ளும் போது 2012/2013 நிதிக்கூற்றுக்களை பெற்றுக் கொள்ளமுடியுமாக இருக்கையில் 2009/2010, 2010/2011 மற்றும் 2011/2012 ஆகிய ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(iv) 2014 சனவரி 02 ஆந் திகதி மீண்டும் தேசிய ரீதியில் போட்டி கூறுவிலை கோராமல் முன்னைய கேள்வி முறைமையைப் பயன்படுத்தி, முதலாவது கொள்வனவின் போது தகைமையை கொண்டிராதவராக கருதிய வழங்குனரிடமிருந்து மீண்டும் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 02 மாதங்களுக்கு முன்னர் தகைமை கொண்டிராதவராக கருதிய வழங்குனருக்கு இதற்காக மீண்டும் கூறுவிலையைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

(v) இரண்டாவது கொள்வனவின் போதும் முன்னைய கேள்விதாரராலேயே குறைந்த விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அக் கூறுவிலையின் பெறுமதி பெறுமதி சேர் வரி (VAT) தவிர ரூபா 72,387,000 ஆக இருந்தது. இதன் போது 2012/2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கருத்திற் கொள்ளப்பட்டிருந்ததுடன், அங்கு நிறுவகத்தின் தேறிய திரவ சொத்துக்கள் 39 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் அக்கேள்விதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(vi) முதலாவது கொள்வனவின் போது குறைந்த விலையைச் சமர்ப்பித்திருந்த கேள்விதாரரிடமிருந்து 2012/2013 ஆம் நிதியாண்டிற்குரிய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களைப் பெற்றுக்கொண்டு அந்தக் கேள்விதாரருடன், கலந்துரையாடி தேவையான தகவல்களைப் பெற்றுக்கொண்டு அவருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தால் அமைச்சிற்கு ரூபா 3,037,000 தொகையை சேமித்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் காணப்பட்டது. அவ்வாறே கொள்வனவுச் செயற்பாட்டை 2013 ஆம் ஆண்டின் போதும் பூர்த்தி செய்வதற்கு இயலாமல் காணப்பட்டது.

(ஆ) **250 கணனிகள் மற்றும் கணனி உப பாகங்கள் கொள்வனவு**

---

தபால் வலைப்பின்னல்படுத்தல் செயற்திட்டத்திற்கு தேவையான கணனிகளின் எண்ணிக்கையை ஒரே தடவையில் தீர்மானிக்காமல் 500 கணனி உபபாகங்கள் கொள்வனவு முடிவடைந்தவுடனேயே மீண்டும் கட்டளையொன்று மூலம் ரூபா 36,526,500 இற்கு 250 கணனி, கணனி உதிரிப்பாகங்கள் மேலே குறிப்பிடப்பட்ட தனியார் நிறுவனத்திடமிருந்து 2014 யூலை 11 ஆந் திகதி கொள்வனவு செய்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சின் 2014 கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் தபால் அலுவலகங்களை வலைப்பின்னல்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் கணனி மற்றும் கணனி உபபாகங்கள் கொள்வனவின் கேள்வி 2014 பெப்ரவரி 14 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், இக்கேள்வி 2015 பெப்ரவரி 02 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) இக்கொள்வனவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- தபால் தலைமையகத்தின் பின்வரும் பிரிவுகளுக்காக வழங்கப்பட்டிருந்த கணனி மற்றும் கணனி அச்சீட்டு இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் 2015 யூலை 10 ஆந் திகதி வரையிலும் பொதிகளிலேயே காணப்பட்டன.

| பிரிவு | உருப்படி | எண்ணிக்கை |
|---|---|---|
| தகவல் தொழில்நுட்ப பிரிவு | கணனி மற்றும் கணனி உப பாகங்கள் | 25 |
| | கணனி அச்சீட்டு இயந்திரங்கள் | 05 |
| தபால் முகாமைத்துவ பயிற்சிப் பிரிவு | கணனி மற்றும் கணனி உப பாகங்கள் | 20 |
| | கணனி அச்சீட்டு இயந்திரங்கள் | 01 |

- 2015 யூன் 29 ஆந் திகதி வரையிலும் 28 கணனிகள் மற்றும் கணனி உப பாகங்கள் என்பன எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டன.

மேற்கூறப்பட்ட விடயங்களின் பிரகாரம் கணனி மற்றும் கணனி அச்சீட்டு இயந்திரங்களின் கொள்வனவு தேவையின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) வாடகை அடிப்படையில் வாகனமொன்று பெற்றுக்கொள்ளல்**

பிரதி அமைச்சருக்கு வாடகை அடிப்படையில் வாகனமொன்றைப் பெற்றுக்கொள்ளும் போது அமைச்சினால் கூறுவிலை கோரப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் பிரதி அமைச்சரால் 3 நிறுவனங்களிடமிருந்து விலை விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 245,000 மாதாந்த வாடகை அடிப்படையில் 2014 மார்ச் மாதத்தின் போது உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமல் வாகனமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

**(ஈ) பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களின் பட்டியல்**

-----------------------------------------------------------------------

அரசாங்க கொள்வனவு வழிகாட்டி கோவையின் 3.4.3(ஈ) வழிகாட்டலின் பிரகாரம், பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களின் பட்டியல் குறைந்தது ஓராண்டிற்கு ஒருமுறை நாளாதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டிற்காக அப்பட்டியல் நாளாதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 நிதி மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு 02 டீசல் வாகனங்களும் ஒரு பெற்றோல் வாகனமும் ஒதுக்கப்பட்டிருக்கையில் டீசல் வாகனமொன்றிற்கும் இரண்டு பெற்றோல் வாகனங்களிற்குமாக 03 வாகனங்களுக்கு எரிபொருள் படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2010 யூன் மாதம் மாதத்திலிருந்து 2014 யூலை வரை ரூபா 2,160,000 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. அப்படிகளை ரூபா 50,000 வீதம் 43 தவணைகள் மற்றும் ஒரு தவணையில் ரூபா 10,600 தொகையுமாக அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு அறவிடுவதற்கோ அல்லது அது தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) அமைச்சரின் செயலாளருக்கு டீசல் வாகனமொன்று ஒதுக்கப்பட்டிருக்கையில் பெற்றோல் வாகனத்திற்காக மாதாந்த எரிபொருள் படிகள் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014 சனவரி மாதத்திலிருந்து செப்தெம்பர் மாதம் வரை ரூபா 88,560 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுகளின் போது இவ்வாறு கூடுதலாகச் செலுத்திய எரிபொருள் படிகள் கணக்கிடப்பட்டு அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சிக்கனமற்ற தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

**(அ) முத்திரைப் புத்தகம் தயாரித்தல்**

முத்திரைகளை உள்ளடங்கிய 1,000 புத்தகங்களை தயாரிப்பதற்காக அனுசரணையாளரொருவரிடமிருந்து 2012 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை பங்களிப்புத் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டு ரூபா 5,088,899 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அனுசரணையாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணம் அச்செயற்பாட்டிற்கு முழுமையாக பயன்படுத்தப்படாமல் தபால் சேவைகள் அமைச்சினதும் தபால் திணைக்களத்தினதும் 108-1-2-2502 மற்றும் 308-2-1-2502 ஆம் இலக்க செலவின விடயங்களிலிருந்து ரூபா 3,600,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஆதலால் அவ்வாறு அனுசரணையாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணத்தில் ரூபா 1,224,757 தொகை பொது வைப்புக் கணக்கில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ii) மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட 150 முத்திரைப் புத்தகங்களை சனாதிபதி செயலகத்திற்கு கையளிப்பதற்கு உத்தியோகத்தரொருவரால் கையேற்கப்பட்டிருந்தது. அப்புத்தகங்களில் 100 புத்தகங்கள் சனாதிபதி செயலகத்திற்கு கையளிக்கப்பட்டதாகவும், 50 புத்தகங்கள் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டதாகவும் தபால் மா அதிபரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த தரப்பினர்களால் அப்புத்தகங்கள் பொறுப்பேற்கப்பட்டமை தொடர்பிலான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பொது நலவாய நாடுகளின் தலைவர் மாநாட்டிற்காக சமூகமளிக்கும் அரச தலைவர்களுக்கு முத்திரை புத்தகங்களை வழங்குவதற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அம்மாநாடு ஆரம்பமாகும் திகதி வரை புத்தகங்கள் அச்சிடப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு திகதியான 2015 ஏப்ரல் 16 ஆந் திகதி வரையிலும் முத்திரையுடன் கூடிய 17 புத்தகங்களும், முத்திரையில்லாத 45 புத்தகங்களும் மாத்திரம் விற்பனை செய்வதற்காக வழங்கப்பட்டிருந்தன. 2015 ஏப்ரல் 16 ஆந் திகதி வரையிலும் முத்திரையுடன் கூடிய புத்தகங்கள் மற்றும் முத்திரையில்லாத புத்தகங்களாக முறையே 4 உம் 17 மாத்திரம் ரூபா 455,000 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(iv) புத்தகங்களை அச்சிடும் நோக்கில் வெளியே அச்சிடப்பட்ட புத்தகங்களில் மீளாய்வாண்டின் போது ரூபா 3,050,000 பெறுமதியான முத்திரையுடன் கூடிய 61 புத்தகங்கள் மற்றும் ரூபா 2,820,000 பெறுமதியான முத்திரையில்லாத 188 புத்தகங்கள் ஆட்களுக்கும் நிறுவனங்களுக்கும் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(v) இவ்வாறு ஆட்களுக்கும் நிறுவனங்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்ட முத்திரைகளுடன் கூடிய புத்தகங்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 237,113 ஆன முத்திரைகளின் பெறுமதியை தீர்வுசெய்யக்கூடிய முறைமை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) முத்திரை புத்தகங்களை தயாரிப்பதற்காக பதவிநிலை உதவியாளரொருவருக்கு நாளொன்றுக்கு ரூபா 500 வீதம் 500 நாட்களுக்கு அனுசரணையாளரிடமிருந்து கிடைத்த பணத்திலிருந்து ரூபா 250,000 தொகை முச்சக்கர வண்டிக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தன. தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவ்வாறான கொடுப்பனவு தாபனப் பணிப்பாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. கொடுப்பனவு செய்யப்பட்ட பிரயாண விபரங்கள் தொடர்பாக எதுவித சான்றொன்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

--------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னாள் தபால் சேவைகள் அமைச்சரின் மதியுரையாளரின் மாதாந்த சம்பளத்தை பெற்றுக்கொள்ளாமைக்கான காரணம் விசாரணையின்றி 2013 மார்ச் 01 ஆந் திகதி முதல் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை சம்பளம் மற்றும் ஏனைய படிகளாக மொத்தம் ரூபா 992,010 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2014 யூன் 20 ஆந் திகதி உரித்துடையவரின் அடையாளத்தை உறுதிப்படுத்தாமல் குறுக்குக்கோடு நீக்கப்பட்ட ரூபா 992,010 பெறுமதியான காசோலை அவரின் பிரதிநிதிக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 நவம்பர் 22 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் தபால் சேவைகள் அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அத் திகதியில்

காணப்பட்ட வாகனங்கள் அந்த அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அத் திகதிக்கு முன்னர் இருந்த தபால் தொலைத் தொடர்பு மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் பெயரில் 14 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(இ) 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலைமையில் காணப்படாத மற்றும் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காக திருத்தியமைக்க முடியாத வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் தபால் சேவைகள் அமைச்சிற்கு சொந்தமான 03 வாகனங்கள் 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன.

(ஈ) நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சிடமிருந்து கிடைத்த வாகனத்திற்கு 2012 ஒக்தோபர் 03 ஆந் திகதியின் பின்னர் எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டோ அல்லது நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டோ இல்லாதிருந்தமையால் அவ்வாகனத்தின் பயன்பாடு தொடர்பாக பரீட்சிக்க முடியாமல் இருந்ததுடன், 2014 நவம்பர் 11 ஆந் திகதி உரிய அமைச்சுக்கு அவ்வாகனம் மீளக் கையளிக்கப்பட்டிருந்தது.

(உ) நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சரால் 2010 ஆம் ஆண்டின் போது எடுத்துக் கொண்டு வரப்பட்ட வாகனம், குழாம் வாகனமாக வாகனப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாகனத்திற்காக நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன் அமைச்சிடமிருந்து எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ் வாகனம் வழக்கொன்றுக்காக கல்கிஸ்ஸ, மாவட்ட நீதிமன்ற வளவில் நிறுத்திவைத்திருப்பதாக 2015 யூலை 21 ஆந் திகதி அமைச்சரின் செயலாளரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) அமைச்சரின் இணைப்புச் செயலாளாரால் 2014 சனவரி 04 ஆந் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருந்த அமைச்சின் வாகனம் தொடர்பில் அத்திகதியின் பின்னர் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை அவ்வாகனம் 2014 சனவரி 31 ஆந் திகதி கராஜில் இடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அமைச்சின் குழாம் வாகனமொன்று 2012 செப்தெம்பர் 05 ஆந் திகதியின் பின்னர் ஓட்டத்தில் ஈடுபடுத்தியதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஏ) 2014 யூன் 28 ஆந் திகதி அமைச்சரின் இணைப்புச் செயலாளரினால் பயன்படுத்தப்பட்டிருந்த வாகனத்தின் அத்திகதியில் மைலோமீற்றரின் பிரகாரம் 203212 கிலோமீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அவ்வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்காக 2014 யூலை 17 ஆந் திகதியிலிருந்து 2014 ஒக்தோபர் 15 வரை கராஜில் இருப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அத்திகதியில் மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அவ் வாகனத்தின் மைலோமீற்றரின் பிரகாரம் 210162 கிலோமீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கடமைகளுக்காக ஒதுக்கப்படாத காலப்பகுதியில் 6,950 கிலோமீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக ஓட்டக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் எரிபொருளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) உத்தியோக பூர்வ வாகனங்களை ஒதுக்கியிருக்கும் போது அமைச்சரின் பதவியணியின் மூன்று உத்தியோகத்தர்களாலும் பிரதி அமைச்சரின் பதவியணியின் உத்தியோகத்தரொருவராலும் 03 குழாம் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 11 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 52 | 44 | 08 |
| (iv) | ஆரம்ப நிலை | 28 | 23 | 05 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 04 | 03 | 01 |
| | மொத்தம் | 99 | 82 | 17 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 17 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**4. தலைப்பு 308 – தபால் திணைக்களம்**

-------------------------------------------------------------------

**4.1 கட்டுநிதிக் கணக்கு**

--------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட கணக்கு அலுவலகங்கிளில் தீர்க்க்பபடாத உப கட்டுநிதி மீதி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் ரூபா 1,270,928 தொகையான தீர்க்கப்படாத உப கட்டுநிதி மீதிகள் உட்பட மாவட்ட கணக்கு அலுவலகங்களில் காணப்பட்ட காசு மீதிகள் 2015 ஆம் ஆண்டின் கட்டுநிதிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) Hongkong and Shanhai Banking Corporation கொடுக்கல் வாங்கல்களுக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட ரூபா 313,432 ஆன மீதி 2015 யூலை 29 ஆந் திகதி வரையிலும் திறைசேரிக்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 30 சந்தர்ப்பங்களில் ரூபா 600,000 தொகை செயல் நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்தியடைந்த உடனேயே பெற்றுக்கொண்ட செயல் நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 18 சந்தர்ப்பங்களில் ரூபா 1,306,489 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 பொது வைப்புக் கணக்கு**

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 10,598,926 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 வருமானக் கணக்கு**

வருமானக் குறியீடு 20.01.02.00 கொண்ட வருமானக் கணக்கு தொடர்பாக மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும்**

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 6,200 மில்லியனாக இருந்ததுடன், ரூபா 6,557 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது நடைமுறை ரீதியான புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தாமல் காலம் கடந்த புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தியமையால் அந்தந்த வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானங்களில் பாரியளவில் முரண்கள் இடம்பெற்றிருந்தது. அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் தாக்கமளித்திருந்தன.

(i) மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 11 சதவீதம் முதல் 1,619 சதவீதம் வரையான முரண்கள் 32 வருமான விடயங்களில் ஏற்பட்டிருந்தது.

(ii) மரண அறிவித்தல் தரகு, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் தரகு, கடித முகாமைத்துவம் மற்றும் ஹைப்ரைட் ரெலிமெயில் இற்கான வருமானம் என்பன 2014 ஆம் ஆண்டிற்கு மதிப்பீடு செய்யப்படாதிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் அவ்வருமான விடயங்களுக்காக முறையே ரூபா 119,829, ரூபா 26,385, ரூபா 2,335,612 மற்றும் ரூபா 25,000 என ரூபா 2,506,826 கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(iii) தொலைபேசி வருமானமாக ரூபா 1,800,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 3,201,012 ஆன தொலைபேசி வருமானம் அவ்வருமானக் குறியீட்டின் கீழ்

காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அது நானாவித வைப்பாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iv) 4 மணித்தியால கூரியர் சேவை வருமானம் 2014 ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில் குறிப்பிடப்படாமல் இருந்ததுடன், வருமானமும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. அச்சேவைக்காக ரூபா 2,919,785 ஆன நிலுவை வருமானம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வருமானக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**(ஆ) நிலுவை வருமானம்**

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் படி சர்வதேச கணக்கில் ரூபா 52,872,816 ஆன வருமானமொன்று நிலுவையாக இருந்ததுடன், அந்நிலுவை வருமானம் 1 ஆண்டு முதல் 4 வருடங்கள் வரையான காலவீச்சிற்குரியதாக இருந்தது. அந்நிலுவை வருமானத்தை அறவிடுதலின் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மூன்று பிரிவுகளில் திரட்டிய நிலுவை வருமானமாக ரூபா 162,665,021 தொகை கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த பிரிவுகளினால் தயாரிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 138,253,795 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 24,411,226 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(iii) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திடமிருந்து 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிலுவையாக இருந்த விடுவிப்பு தபால் வருமானம் ரூபா 30,420,493 தொகையும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 5,887,526 தொகையுமாக மொத்தம் ரூபா 36,308,019 தொகையான வருமானம் நிலுவையாக இருந்தது.

(iv) சர்வதேச தபால் கொடுக்கல் வாங்கல்களுக்கான நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் 2010 ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய புதிதாக இனங்காணப்பட்ட நிலுவை

வருமானமாக ரூபா 140,080,547 ஆன மீதியொன்று சீராக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக சர்வதேச தபால் நிலுவை வருமானமாக ஆண்டின் இறுதியின் போது வெளிப்படுத்தப்பட்ட பெறுமதி நடைமுறையில் இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(இ) அறிக்கையிடல்**

-------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2002 யூலை 17 ஆந் திகதிய 1/2002 ஆம் இலக்க அரசாங்க நிதி கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் மும்மாத வருமான அறிக்கை அந்தக் காலப்பகுதி முடிவடைந்த திகதி தொடக்கம் 15 நாட்களுக்குள் அரசாங்க நிதி கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 ஆம் ஆண்டின் போது வருமானம் குறைவடைதல் 10 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சிலான அளவைக் கொண்டிருந்த போதிலும், 15 வருமான விடயங்களில் வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 278,756,304 ஆல் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் இக்குறைவு தொடர்பாக மேற்குறித்த சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க நிதி கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு செயற்பட்டிருக்கவில்லை.

(iii) 2006 செப்தம்பர் 27 ஆந் திகதிய 187/2006 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் சேகரிக்கப்படும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அரச கணக்குகள் திணைக்களத்தினால் மாதாந்தம் தயாரிக்கப்படுகின்ற கணக்குக் கூற்றுக்களுடன் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் காண்பிக்கப்படும் பெறுமதிகள் ஒப்பிடப்பட்டு அறிக்கையொன்று அடுத்த மாதத்தின் இறுதி திகதிக்கு முன்னர் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டின் யூலை, நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) வருமானத்தைக் கணக்கீடு செய்தல்**

---------------------------------------------------------------

மீளாய்வாண்டின் காசேட்டின் பிரகாரம் சர்வதேச தபால் வருமானம் ரூபா 37,842,890 ஆக இருந்த போதிலும், வருமானக் கணக்கில் அவ்வருமானம் ரூபா 40,213,565 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போதும் சர்வதேச தபால் வருமானக் காசேடு மற்றும் வருமானக் கணக்குடன் இணங்கியிருக்கவில்லை. வருமானத்தின் பகுதியொன்று பிரதிக் கணக்காளரின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமை அவ்வேறுபாட்டிற்கு காரணமாக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போதும் அவ்வேறுபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(உ) தொலைத் தொடர்பு இல்லங்களின் வருமானம்**

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தபால் திணைக்களம் தற்போது செயற்படுத்தப்படும் தொலைத் தொடர்பு இல்லம் தொடர்பாக வினவி தபால் மா அதிபருக்கு வழங்கப்பட்ட 2015 பெப்ரவரி 12 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், உரிய தகவல்கள் 2015 யூலை 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால் தற்போது செயற்படுத்தப்படுகின்ற மற்றும் செயற்படுத்தப்படாத தொலை தொடர்பு இல்லங்களையும் அந்தந்த தொலைத்தொடர்பு இல்லங்களின் வருமானத்தையும் இனங்காண முடியாதிருந்தது.

(ii) 2000 நவம்பர் 07 ஆந் திகதிய 14/2000 ஆம் இலக்க தபால் மா அதிபரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தொலைத் தொடர்பு இல்லங்களின் ஒவ்வொரு மாத இறுதியிலும் இலாப நட்டக் கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் தொலைத் தொடர்பு இல்லங்களின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை கணக்கீடு செய்வதற்கு முறைமையொன்று பின்பற்றப்பட்டிருந்தது.

(iii) 2014 ஏப்ரல் மாதத்திலிருந்து திசெம்பர் வரை கிடைத்த வருமானமான ரூபா 44,184,797 ஆன தொலைத் தொடர்பு இல்லங்களின் வருமானக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அக்கால எல்லை வரை

பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவு என்பன வைப்புக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| 2014.01.01 இல் மீதி | 35,262,146 |
| 2014 ஆம் ஆண்டில் பெறுவனவுகள் | 36,673,316 |
| | ------------- |
| | 71,935,462 |
| 2014 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகள் | 64,894,194 |
| | ------------- |
| 2014.12.31 இல் மீதி | **7,041,268** |
| | ======= |

இவ்வாறு வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்ருந்த வருமானம் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமையாலும் அட்டுறு அடிப்படையில் கணக்குகளில் சீராக்கம் செய்யாமையாலும் 2014 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 35,262,146 ஆன மீதி ஆண்டின் இறுதியளவில் ரூபா 7,041,268 வரை குறைவடைந்திருந்தது.

## 4.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---

30801 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 42,730,199 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து நிலவிய போதிலும், அந் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பான பின் தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டன.

(ஆ) 2014 யூன் மாதத்திற்காக கடன் மற்றும் முற்பணம் தொடர்பாக கடன்கொடுத்தோர் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 215,903 தொகையான மீதி தலைமை கணக்கு அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட முற்பணக் கணக்கில் இடமாற்றம் பெற்றுவந்த துணைப் பட்டோலையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதி 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தரொருவர் இடமாற்றம் பெற்றுச் சென்றதன் பின்னர், 02 மாதங்களுக்குள் அக்கடனை தீரத்து வைக்க வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத மொத்தக் கடன் மீதி ரூபா 260,945 ஆக இருந்தது.

(ஈ) தெஹிவள கல்கிஸ்ஸ மாநகர சபை, கொழும்பு மாநகர சபை மற்றும் ஹோமாகம கல்வி அலுவலகத்திற்கு இட மாற்றலாகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 599,015 ஆன கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஒரே தடவையில் தீர்வு செய்யாமல் மாதாந்த தவணையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(உ) தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் மீதி மற்றும் மாவட்ட கணக்கு அலுவலகங்களின் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதி முறையே ரூபா 1,756,537,839 தொகை மற்றும் ரூபா 1,757,801,644 ஆக இருந்தமையால் ரூபா 1,263,805 ஆன வேறுபாடு காணப்பட்டது.

## 4.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---------------------------------------------------------------------

### 4.5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

---------------------------------------------------------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

-----------------------------------------------------------

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

## 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

-------------------------------------------------

திணைக்களத்தின் சொத்துக்கள் மற்றும் தீர்க்கப்படாத பொறுப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

---

நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் தலைமை அலுவலகம், மத்திய தபால் பரிவர்த்தனை நிலையம் மற்றும் 11 பிராந்திய தபால் அத்தியட்சகர் அலுவலகங்கள் என்பவற்றில் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 யூலை 30 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டிற்காக 2015 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 962,951 ஆன பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கின் பொறுப்புக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நி.பி 94(1) இற்கு இணங்காமல் 11 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பினை விஞ்சி ரூபா 187,427,193 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**4.7 செயலாற்றல்**

---

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

---

தபால் திணைக்களத்தால் உழைக்கப்பட்ட வருமானம், செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விபரம் | 2013 | 2014 | வேறுபாடு | அதிகரிப்பு சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| வருமானம் | 5,907 | 6,557 | 650 | 11 |
| செலவினம் | 8,766 | 9,541 | 775 | 8 |
| செயற்பாட்டுப் பற்றாக்குறை | 2,859 | 2,984 | 125 | 4 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஒட்டு மொத்த வருமானம் 11 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டுப் பற்றாக்குறை 4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அது முன்னைய ஆண்டின் பற்றாக்குறைக்கு ஒப்பாக ரூபா 125 மில்லியன் அதிகரிப்பொன்றாக இருந்தது. அதற்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த சம்பள அதிகரிப்பு உட்பட செலவின அதிகரிப்புக்கள் தாக்கமளித்திருந்தன.

**(ஆ) திட்டமிடல்**

2014 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் செயன்முன்னேற்றம் என்பவற்றைப் பரீட்சிக்கும் போது செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்காத 11 சந்தர்ப்பங்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.8 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு

(அ) சீராக்கப்பட வேண்டிய மீதி

தபால் திணைக்களத்தால் 2014 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சீராக்கல் தொடர்பான விபரம் | | காலப்பகுப்பாய்வு | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | 06 மாதங்களுக்கு மேற்பட்ட 01 வருடத்திற்கு குறைவு | 01 வருடத்திற்கு மேற்பட்ட 03 வருடங்களுக்கு குறைவு | 03 வருடங்களுக்கு மேல் | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) தேறாத வைப்புக்கள் | 149,742 | 948,586 | 500,000 | 1,598,328 |
| (ii) விநியோகிக்கப்பட்டிருந்தும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 69,221 | - | - | 69,221 |
| (iii) இனங்காணப்படாத வரவு | 2,000 | 100 | 50,000 | 52,100 |
| (iv) இனங்காணப்படாத செலவு | 23,160 | - | - | 23,160 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 05 நடைமுறைக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், 06 மாதங்களைக் கடந்த தேறாத ரூபா 1,598,328 பெறுமதியான 63 வைப்புக்கள் காணப்பட்டன.

(ஆ) யாழ்ப்பாண மாவட்ட கணக்குகள் அலுவலகத்தின் நடைமுறைக் கணக்கில் 2012 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 276,588 பெறுமதியான 50 காசோலைகள், 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 672,000 பெறுமதியான 06 காசோலைகள் மற்றும் 2014 சனவரி மாதத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 5,000 பெறுமதியான 02 காசோலைகள் என்பன 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் வரையிலும் தேறாமல் காணப்பட்டன.

(இ) கொழும்பு தெற்கு மாவட்ட கணக்குகள் அலுவலகத்தின் நடைமுறைக் கணக்கிற்குரிய 2007 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் ரூபா 500,000 தொகையான தேறாத வைப்புக்கள் மீதியொன்று தொடர்ந்தும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்றது. அவ்வாறே 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தலைமை அலுவலகத்திற்குரிய 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் இனங்காணப்படாத ரூபா 50,000 தொகையான கொடுப்பனவு தொடர்பாக நடைபெற்ற புலனாய்வு 2015 யூலை 17 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காசேட்டின் மீதியை விஞ்சி கொடுப்பனவு செய்யப்படக்கூடாத போதிலும், தலைமை அலுவலகத்தின் கணக்கில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காசேட்டின் மீதியை விஞ்சி கொடுப்பனவு ரூபா 20,259,436 தொகை திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு தீர்க்கப்பட்டிருந்தது.

**4.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

**அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் நடைமுறைகளிலிருந்து விலகல்**

---

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் அரசின் கொள்வனவு வழிகாட்டி கோவைக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறு

**(அ) டின் டொகட் மற்றும் ஈய முத்திரை வழங்கல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 15,000 கிலோகிராம் ஈய முத்திரை ரூபா 7,039,200 பெறுமதிக்கும், 5000 கிலோகிராம் டின் டொகட் ரூபா 2,228,800 இற்கும் பெற்றுக்கொள்வதற்கான கொள்வனவிற்காக 2014 பெப்ரவரி 21 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வழங்கலை நிறைவேற்றுவதற்கு அவ்வொப்பந்தக்காரர்கள் தவறியிருந்தனர்.

(ii) 2014 ஆம் ஆண்டின் போது டின் டொகட் மற்றும் ஈய முத்திரை வழங்கல் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு உத்தியோகத்தினர்களினால் அவ்வொப்பந்தக்காரருக்கு பொருட்கள் வழங்குவதற்கு இருந்த இயலுமையை உறுதிப்படுத்த வேண்டியதாக இருந்த போதிலும் உடன்படிக்கை பிரகாரம் நிர்ணயித்த திகதியில் உள்ளவாறு டின் டொகட் மற்றும் ஈய முத்திரை ஒப்பந்தக்காரரால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சணல் கயிறு மற்றும் சணல் நூல் கொள்வனவு செய்தல்**

----------------------------------------------------------------------------------------------------

சணல் கயிறு மற்றும் சணல் நூல் கொள்வனவு செய்வதற்காக 2014 பெப்ரவரி 21 ஆந் திகதி ஒப்பந்தம் அளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அந்நிறுவனத்துடன் மேற்கொண்ட உடன்படிக்கை பிரகாரம் ரூபா 3,190,000 பெறுமதியான 10,000 கிலோகிராம் சணல் கயிறு மற்றும் ரூபா 2,960,000 பெறுமதியான 10,000 கிலோ கிராம் சணல் நூல் 2014 யூலை 21 ஆந் திகதிக்கு முன்னர் தபால் திணைக்களத்திற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் அத்திகதி வரையில் ஒவ்வொரு உருப்படியிலும் முறையே 5,061 கிலோகிராமும் 5,890 கிலோகிராமும் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**(இ) முத்திரை வழங்கல்**

----------------------------------

முத்திரை லாகட் வழங்குவதற்காக 2014 பெப்ரவரி 21 ஆந் திகதி ஒப்பந்தம் அளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அந்நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 4,160,000 இற்கு 20,000 கிலோகிராம் முத்திரை லாகட 2014 யூலை 21 ஆந் திகதி வரையில் தபால் திணைக்களத்திற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் அத்திகதியில் 14,730 கிலோகிராம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மேற்படி குறித்த வழங்கல் உரிய நேரத்தில் களஞ்சியத்திற்கு கிடைக்காமை காரணமாக தொழிற்பாட்டு செயற்பாட்டினை தொடர்ச்சியாக நடாத்திச் செல்ல முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஈ) பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களின் பட்டியல்**

-------------------------------------------------------------------------------

அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.4.3(ஈ) வழிகாட்டலின் பிரகாரம், பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களின் பட்டியல் குறைந்தது ஓராண்டிற்கு

ஒருமுறை நாளாதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டிற்காக அப்பட்டியல் நாளாதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர் கொள்வனவு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் இலங்கை ரூபா 500,000 இற்கு மேற்படும் பொருட்கள் அல்லது சேவைகள் ஒப்பந்தத்திற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்று எழுதி கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் 05 சந்தர்ப்பங்களில் ரூபா 500,000 எல்லையினை விஞ்சிய ரூபா 15,064,968 பெறுமதியான வாகன உதிரிப்பாகங்கள் கொள்வனவின் போது ஒப்பந்த உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.2.1 வழிகாட்டிக்கு முரணாக தேசிய ரீதியில் போட்டி கேள்வி கோராமல் ரூபா 2,312,353 பெறுமதியான டயர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) 06 அப்பர் ஆம் புஷ் தேவையாக இருந்த போதிலும் களஞ்சியத்தில் முழுமையான 16 அப்பர் ஆம் புஷ் இருக்கையில் மிட்சுபிஷி முகவர் நிறுவனத்திடமிருந்து ரூபா 164,010 இற்கு 06 அப்பர் ஆம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(iv) எந்திர பொறியியலாளர் பிரிவில் பழைய டயர்களை பதிவுசெய்வதற்கு பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன், பழைய டயர்களை ஏல விற்பனை செய்யும் போது அத்திகதியில் காணப்படும் டயர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு ஏல விற்பனைக்கு சமர்ப்பிக்கும் முறைமையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்படும் புதிய டயர்களுக்கு பதிலாக வாகனங்களில் இருந்த டயர்கள் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டதா எனவும் அந்த அனைத்து டயர்களும் ஏல விற்பனை செய்யப்பட்டதா எனவும் உறுதிப்படுத்தப்பட முடியவில்லை.

**(ஊ) தகவல் தொழில்நுட்ப பிரிவின் சேவர் கணனி முறைமை அபிவிருத்தி செய்தல்**

---

மேற்குறித்த ஒப்பந்தம் 2014 ஜனவரி 17 ஆந் திகதி ரூபா 13,333,499 பெறுமதிக்கு தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அக்கம்பனியின் வேண்டுகோளின் பேரில் மேலும் 30 நாட்கள் அவ்வொப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014 மார்ச் 26 ஆந் திகதி வழங்கல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மேலும் 41 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2014 மே 06 ஆந் திகதி வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்குறித்த கொள்வனவு 41 நாட்கள் தாமதமாக இருந்த போதிலும் முத்திரை பணியகத்திற்காக 02 சேர்வர் கணனி இயந்திரங்கள் மீள் கட்டளையிடல் அடிப்படையில் அக்கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இவ்வியந்திரங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அக்கொள்வனவை குறித்த திகதியில் பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது. இக் கொள்வனவிற்காக உடன்படிக்கை மேற்கொள்ளாததன் காரணமாக தாமத காலத்திற்காக தாமத கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(எ) 400 கடித தராசுகள் கொள்வனவு**

---

மீளாய்வாண்டின் போது 400 கடித தராசுகள் ரூபா 4,928,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2.1 வழிகாட்டியின் பிரகாரம் தேசிய ரீதியாக போட்டிவிலை கோரல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 10 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் கேள்வி கோரப்பட்டிருந்தது. வழங்குனர் நிறுவகத்துடன் உடன்படிக்கையொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஏ) 80 டெஸ்க்டொப் கணனிகள் கொள்வனவு**

---

80 டெஸ்க்டொப் கணனிகள் ரூபா 9,445,360 தொகைக்கு கொள்வனவு செய்யும் போது அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1(இ) வழிகாட்டியின் பிரகாரம் திறந்த விலைகோரல் மேற்கொள்ளாமல் ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் நேரடியாக விலை மனு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன்,

உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு செய்யப்பட்ட கணனிகளில் ஒரு கணனி மாத்திரம் மாதிரிகளுடன் பரீட்சிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு பரீட்சிக்கப்பட்ட பரீட்சிக்கப்பட்ட கணனி மூன்று சந்தர்ப்பங்களில் மாதிரிகளுடன் இணங்கியிருக்கவில்லை.

**(ஐ) மதுரங்குளி அஞ்சல் அலுவலக புதிய கட்டிட நிர்மாணம்**

---

மேற்குறித்த கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக புத்தளம் மாவட்ட செயலாளரினால் பெறுமதி சேர் வரியுடன் ரூபா 8,317,294 இற்கு கேள்விதாரரொருவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தினால் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் 2011 செப்தெம்பர் 11 ஆந் திகதி ரூபா 5 மில்லியனும், 2011 திசெம்பர் 15 ஆந் திகதி ரூபா 3,317,294 தொகையுமாக மொத்தம் ரூபா 8,317,294 தொகை புத்தளம் மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், உடன்படிக்கையின் பிரகாரம் 2012 ஆகஸ்ட் 24 ஆந் திகதி கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு தபால் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட வேண்டியிருந்தது. இருந்த போதிலும், 2014 செப்தெம்பர் 05 ஆந் திகதி வரையிலும் தபால் அலுவலக கட்டிடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு தபால் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் படி உடன்படிக்கையின் பிரகாரம் தாமதமாகும் நாளொன்றுக்கு ரூபா 3,713 வீதம் 2012 ஆகஸ்ட் 24 ஆந் திகதி முதல் 2014 செப்தெம்பர் 05 ஆந் திகதி வரை தாமதக் கட்டணமாக ரூபா 2,758,759 ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) கிரனைட் ஒட்டாமல் கவுண்டர் நிர்மாணிக்குமாறு 2012 செப்தெம்பர் 14 ஆந் திகதி தபால் மா அதிபரால் மாவட்ட செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், மேலதிக வேலைக்காக கொடுப்பனவு செய்யும் போது கிரனைட் ஒட்டுவதற்காகவும் ரூபா 143,870 தொகை உட்பட உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையை விட ரூபா 423,558 தொகை மாவட்ட செயலாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**(ஓ) வய்க்கால தபால் அலுவலக புதிய கட்டிட நிர்மாணம்**

---

வய்க்கால தபால் அலுவலகத்தின் புதிய கட்டிட நிர்மாணத்திற்காக புத்தளம் மாவட்ட செயலாளர் ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2011 நவம்பர் 23 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 2012 மே 23 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2012 சனவரி 31 வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வேலை ஆரம்பிப்பதற்கு முன்னர் 2011 செப்தெம்பர் 21 ஆந் திகதி ரூபா 5,000,000 மற்றும் 2011 திசெம்பர் 15 ஆந் திகதி ரூபா 3,790,490 உமாக ரூபா 8,790,490 தொகை தபால் திணைக்களத்தினால் புத்தளம் மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2014 மார்ச் 23 ஆந் திகதி கட்டிடத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையால் நாளொன்றுக்கு ரூபா 3,924 வீதம் ரூபா 2,625,156 தொகை தாமதக் கட்டணம் கழிக்காமல் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்தக்காரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு பிணையின் செல்லுபடிக்காலம் 2012 யூன் 20 ஆந் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வேலை பூர்த்தி செய்யப்பட்ட திகதியின் பிரகாரம் பாதுகாப்பு பிணை நீடிக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை.

(iii) இந் நிர்மாணத்தின் போது 7 சதவீதக் கழிவொன்று அதாவது ரூபா 590,758 தொகையை வழங்குவதற்கு ஒப்பந்தக்காரர் இணங்கியிருந்த போதும், அக் கழிவினை கருத்திற் கொள்ளாமல் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) கட்டிட நிர்மாணத்திற்காக புத்தளம் மாவட்ட பொறியியலாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 7,429,450 ஆக இருந்த போதிலும் மேலதிக வேலைகளுடன் மொத்தக் கொடுப்பனவு ரூபா 10,788,892 ஆக இருந்தது.

**(ஓ) எல்ல தபால் நிலையம் நிர்மாணம்**

-----------------------------------------------------------

இந் நிர்மாண நடவடிக்கை பதுளை மாவட்ட செயலாளருக்கு 2011 சனவரி 17 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 12,028,158 தொகையான பொறியியலாளர் மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்விமனுவின் பிரகாரம் பெறுமதி சேர் வரியுடன் ஒப்பந்த பெறுமதி ரூபா 9,709,562 ஆக இருந்தது. பின்னர் அவ்வொப்பந்த பெறுமதி ரூபா 9,090,368 ஆக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. இத் திருத்தம் தொடர்பாக மாவட்ட செயலாளரால் ஒப்பந்தக்காரருக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2012 யூன் 13 ஆந் திகதியளவில் நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2015 மார்ச் 15 ஆந் திகதிவரை அக் காலம் அவ்வப்போது நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், நிர்மாணங்களின் செயல் முன்னேற்றம் 55 சதவீதமாக இருக்கையில் 2013 யூலை 23 ஆந் திகதி வேலை நிறுத்தப்பட்டிருந்தது. அது வரையிலும் ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 9,709,562 ஆன முழுத் தொகையையும் தபால் திணைக்களத்தினால் மாவட்ட செயலாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அத் திகதியின் பின்னர் அதாவது 2013 திசெம்பர் 12 ஆந் திகதி ரூபா 2,318,591 தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்த பொறியியளாளர் மதிப்பீட்டுப் பெறுமதிக்குச் சமமான தொகையொன்று விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் போது பக்க சுவரொன்று நிர்மாணிப்பதற்கான தேவைப்பாடு ஒப்பந்தக்காரரால் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன், அதன் பொறியலாளர் மதிப்பீடு ரூபா 1,816,839 ஆக இருந்தது. எவ்வாறாயினும் இந்தப் பக்கச்சுவர் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஔ) தொம்பகஹவெல தபால் அலுவலக நிர்மாணம்**

--------------------------------------------------------------------------------

அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.2.1 வழிகாட்டிக்கு முரணாக தொம்பகஹவெல தபால் அலுவலக நிர்மாணத்திற்காக 10 நிறுவனங்களிடமிருந்து கேள்வி கோரப்பட்டு அதில் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு பெறுமதி சேர் வரியுடன் ரூபா 6,890,510 இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

உடன்படிக்கையின் பிரகாரம் 2011 யூலை 01 ஆந் திகதி நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 2012 சனவரி 31 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாணம் 2011 செப்தெம்பர் 24 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அது பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடம் 2014 மே 23 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 842 நாட்கள் தாமத காலத்திற்காக உடன்படிக்கை பிரகாரம் தாமதக் கட்டணமாக ரூபா 689,051 தொகை ஒப்பந்தக்காரரின் கொடுப்பனவுகளிலிருந்து கழித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.10 நட்டங்களும் சேதங்களும்

---------------------------------------------

2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மேலும் பதிவழிப்பதற்கு இருந்த சேதங்கள் மற்றும் நட்டங்களாக ரூபா 9,362,929 தொகை ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது, அதில் 1980 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் நட்டங்களும் சேதங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. அந்நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களம் தவறியிருந்தது.

## 4.11 முகாமைத்துவ நலிவுகள்

--------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) காசுக்கட்டளை சேவைகள் கணக்கு – 2013

--------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) காசுக் கட்டளை வழங்கல், காசுக் கட்டளை கொடுப்பனவு மற்றும் காசுக்கட்டளை தரகு வருமானம் திணைக்கள கணணி மென்பொருள் மூலம் பெற்றுக் கொண்டிருந்த மீதிகளுக்கும், காசுக் கட்டளைக் கணக்கின் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் முறையே ரூபா 4,957,288,768 தொகை, ரூபா 3,589,486,834 மற்றும் ரூபா 20,160,650 ஆன வேறுபாடுகள் காணப்பட்டன.

இவ் வேறுபாடு காரணமாக மீளாய்வாண்டின் போதும் காசுக் கட்டளை கணக்கின் இணக்கக் கூற்று மாவட்ட கணக்குப் பொழிப்பின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கணக்குப் பொழிப்பு மற்றும் கணக்கு வைப்பு பிரிவிடமிருந்து திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்ட காசுக் கட்டளை, மாதாந்த கணக்கு பொழிப்பினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தவறுகளை திருத்தும் நாட்குறிப்பு பதிவுகள் தொடர்பான விபரங்கள் காசுக்கட்டளை கட்டுப்பாட்டாளருக்கு அறிக்கையிடாமையின் காரணமாக கணக்கு வைப்பு பிரிவு மீதியுடன் ஒப்பிடும் போது காசுக் கட்டளை கொடுப்பனவுகளில் ரூபா 1,698,025,917 தொகை மற்றும் காசுக் கட்டளை வழங்கல்களில் ரூபா 1,563,578,271 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மத்திய தபால் பரிவர்த்தனையின் வெளிநாட்டு பொதி பிரிவில் இடம் பெற்றுள்ள மோசடிகள்

---

2014 மே 03 ஆந் திகதி துபாயிலிருந்து இந்நாட்டிற்கு கிடைக்கப்பெற்ற சந்தேகத்திற்கு இடமான மூன்று பொதிகளை அனுப்புவதை நிறுத்தி 2014 மே 03 ஆந் திகதி 1 ஆவது விமானக் களஞ்சியத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இதற்கான புலனாய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தபால் மா அதிபரால் 03 மாத தாமதத்தின் பின்னர் 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதி கட்டளை வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஒருபொதி 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதி திறக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய இரண்டு பொதிகளும் 20 நாட்களின் பின்னர் 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதி திறக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மத்திய தபால் பரிவர்த்தனைப் பிரிவின் வெளிநாட்டு பொதிகள் பிரிவின் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் இணைந்து இம்முறைகேட்டில் ஈடுபட்டிருந்தமையும் இவ்வாறான முறைகேடுகள் இதற்கு முன்னரும் இடம் பெற்றுள்ளதாக புலனாய்வின் மூலம் கண்டறியப்பட்டது. உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக ஒரே இடத்தில் ஒரே வேலையில் ஈடுபட்டிருந்தமை இவ்வாறான முறைகேடுகள் நடைபெறுவதற்கு பிரதான காரணமாக அமைந்தது.

(ii) களஞ்சியத்தில் இருந்த பொதிகளினுள் இருந்த பொருட்களை அகற்றி விட்டு, அதற்குப் பதிலாக வேறு பொருட்களை வைத்தல் அக்களஞ்சியத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும்

தெரியாமல் நடைபெற முடியாத காரியம் என்பதனை அவர்கள் ஏற்றுக்கொண்டதன் பின்னர் ஐந்து பேர் அரை சம்பளத்துடன் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர். 2015 மார்ச் 13 ஆந் திகதியளவில் அவர்கள் மீண்டும் மத்திய தபால் பரிவர்த்தனையின் வேறொரு பிரிவில் சேவைக்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

(iii) இம் மோசடி செயற்பாடு தொடர்பாக பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் 04 ஊழியர்களும் மேலே குறிப்பிடப்பட்ட 05 உத்தியோகத்தர்கள் உட்பட 09 பேர் இக் குற்றச்சாட்டிற்கு உட்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட ஓராண்டு காலம் கடந்திருந்த போதிலும் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை திணைக்களத்தினால் குற்றச்சாட்டுப் பத்திரமொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) புலனாய்வு நடவடிக்கைகளின் செயலாற்றல்**

---

2015 சனவரி 19 ஆந் திகதிய கடிதத்தின் படி, புலனாய்வுக் கட்டுப்பாட்டுப் பிரிவு பரிசோதனையொன்றை மேற்கொண்டு விசாரணை நிலவரத்தையும் 2014 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட புலனாய்வு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களையும் சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்த போதிலும் அது தொடர்பான தகவல்கள் காணப்படவில்லையென நிர்வாக புலன்னாய்வினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புலனாய்வுக் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு ஒவ்வொரு புலனாய்விற்குமாக புலனாய்வுகள் கையளிக்கப்பட்ட திகதிகளை வழங்காமை காரணமாக 2014 சனவரி 01 இல் உள்ளவாறு எஞ்சிக் காணப்பட்ட புலன்னாய்வுகளின் தாமதம் தொடர்பாக முடிவொன்றுக்கு வருவதற்கு முடியாமல் இருந்தது.

(i) 2014 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ஆரம்ப புலனாய்வுகளின் எண்ணிக்கை 2,202 ஆகவும் 2014 ஆம் ஆண்டின் போது கிடைத்த புலனாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 1,138 ஆகவும் இருந்தது. ஆண்டினுள் பரிசோதனை நடவடிக்கைகளில் பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கை 737 ஆக இருந்தமையால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்ப புலனாய்வு நடவடிக்கைகளில் 2,603 கோவைகள் பூர்த்தி செய்வதற்கு இருந்தன. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில்

ஆரம்ப புலனாய்வு நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தலின் ஒட்டுமொத்த சதவீதம் 22 ஆக இருந்தது. ஒவ்வொரு வட்டாரங்களின் ஆரம்ப புலனாய்வுகளின் செயன்முன்னேற்றத்தை வெவ்வேறாக பரிசோதித்த போது புலனாய்வுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் செயன்முன்னேற்றம் 6 சதவீதமாக இருந்ததுடன், ஏனைய வட்டாரங்களில் 9 சதவீதம் முதல் 47 சதவீதம் வரையான செயல்முன்னேற்றமொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ii) முறையான ஒழுக்காற்று பரிசோதனை தொடர்பான செயன்முன்னேற்றத்தைப் பரிசோதித்த போது 2014 சனவரி 01 இல் உள்ளவாறு பரிரோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 38 கோவைகள் காணப்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டின் போது 16 கோவைகள் கிடைக்கப்பெற்றிருந்தது. ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 09 மாத்திரமாக இருந்தமையால் மேலும் பரிசோதனை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு 45 கோவைகள் காணப்பட்டன. அதன் பிரகாரம் முறையான ஒழுக்காற்று பரிசோதனைகளின் திரட்டிய செயன்முன்னேற்றம் 17 சதவீதமாக இருந்தது. ஒவ்வொரு வட்டாரங்களின் முறையான புலனாய்வு நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றத்தை பரீட்சித்த போது புலனாய்வுக் கட்டுப்பாட்டு மற்றும் மேல், வட மத்திய, கிழக்கு மாகாணங்களில் எதுவித செயன்முன்னேற்றமொன்றும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஏனைய வட்டாரங்களின் செயன் முன்னேற்றம் 22 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரை பரவிக் காணப்பட்டது.

(iv) தற்போது தபால் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட புலனாய்வு பரிசோதனை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 51 ஆக இருந்த போதிலும், 18 வெற்றிடங்களாக இருந்தன. புலனாய்வு நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம் குறைவடைவதற்கு உத்தியோகத்தர் பற்றாக்குறையும் தாக்கமளித்திருந்தது.

## 2.13 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 121 | 82 | 39 |
| (ii) | மூன்றாம் நிலை | 147 | 61 | 86 |
| (iii) | இரண்டாம் நிலை | 8,854 | 7,336 | 1,518 |
| (iv) | ஆரம்ப நிலை | 17,659 | 16,929 | 730 |
| | மொத்தம் | **26,781** | **24,408** | **2,373** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 2,373 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### (ஆ) பதவியணியினர் விபரங்கள் மற்றும் சம்பளக் கொடுப்பனவு பரிசோதனை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தபால் திணைக்களத்தின் நாடளாவிய ரீதியில் பரவிக் காணப்படும் அலுவலகங்கள், தபாலகங்கள், உப தபாலகங்கள் என்பவற்றில் சேவையிலீடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களின் விபரங்களையும் தபால் தலைமையகத்தின் நிர்வாகப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டிய போதிலும் அவ்வாறான இயலுமை காணப்பபடவில்லை.

(ii) தபால் தலைமையகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தகவல்கள் மாத்திரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அத்தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கான சம்பள கொடுப்பனவு**

2012 ஆகஸ்ட் 16 ஆந் திகதி புத்தசாசன அமைச்சிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தரொருவருக்கு தபால் திணைக்களத்தினால் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.